# நாகர்கோவில் மாநகராட்சியில் சீரான குடிநீர் விநியோகம் - அரசு நடவடிக்கை!

## சட்டப்பேரவையில் – அமைச்சர் கே.என்.நேரு விளக்கம்!

**சென்னை, ஏப்.4-**
**சட்டப்பேரவையில் கேள்வி நேரத்தின்போது, நாகர்கோவில் மாநகராட்சியில் சீரான குடிநீர் விநியோகம் குறித்து அமைச்சர் கே.என்.நேரு விளக்க மளித்தார்.**



சட்டப்பேரவையில் அமைச்சர் கே.என்.நேரு குறிப்பிட்ட தாவது :-

நாகர்கோவில் மாநகராட்சியில் மொத்தம் 27 வார்டுகள் உள்ளன. நாகர்கோவில் மாநகராட்சியின் குடிநீர் தேவை மொத்தம் 46 MLD ஆகும். தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் புதிதாக நிறைவேற்றப்பட்டுள்ள கூட்டுக் குடிநீர் திட்டம்மூலம் 41 MLD, உள்ளாட்சி அமைப்புகளின்மூலம் 5 MLD வழங்கப்படு கிறது. ஆக மொத்தம் நாகர்கோவில் மாநகராட்சிக்கு 46 MLD குடிநீர் தினந்தோறும் வழங்கப்படுகிறது.

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்மூலம் புதிதாக நிறைவேற்றப்பட்டுள்ள நாகர்கோவில் மாநகராட்சிக்கென தனி குடிநீர்த் திட்டம் 30.4.2025-ல் முழுமையாக மாநகராட்சியிடம் ஒப்படைக்கப்படும்.

அப்படி ஒப்படைக்கப்படும்போது நீங்கள் சொன்னதுபோல் இல்லாமல் ஒரே சீரான விநியோகம் நடைபெறும் என்று அதிகாரிகள் தெரிவித்திருக்கிறார்கள்.

எனவே, உங்களுக்கு விவரம் சொல்ல வேண்டும் என்பதற்காகத்தான் இப்போது தெரிவித்தேன்.

இவ்வாறு அமைச்சர் கே.என்.நேரு பதிலளித்தார்.

---

### கன்னியாகுமரி தேவஸ்தானத் திருக்கோயில்களுக்கு

# முதல்வர் இதுவரை ரூ.33 கோடி அரசு மானியமாக வழங்கியுள்ளார்!

## சட்டப்பேரவையில் – அமைச்சர் பி.கே.சேகர்பாபு தகவல்!

சென்னை, ஏப்.4-



தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 01.04.2025 அன்று இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, திருநெல்வேலி சட்டமன்ற உறுப்பினர் நயினார் நாகேந்திரன் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்தார்.

**நயினார் நாகேந்திரன் :** நாகர்கோவில், நாகராஜா திருக்கோயிலுக்கு எப்போது குடமுழுக்கு நடத்தப்படும்? அந்த கோயிலின் திருக்குளம் சீரமைக்கப்படுமா?

**அமைச்சர் பி.கே.சேகர்பாபு:** உறுப்பினர் அவர்கள் கோரிய நாகர்கோவில், நாகராஜா திருக்கோயிலுக்கு ரூ.1.25 கோடி செலவில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதில் 60 சதவீத பணிகள் நிறைவுற்று இருக்கின்றன. பிரசனம் பார்த்து, ஆகஸ்ட் மாதம் குடமுழுக்கு நடத்துவதற்கு தேதி நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

ஆகவே, அத்திருக்கோயிலுக்கு ஆகஸ்ட் மாதத்தில் நிச்சயமாக குட முழுக்கு நடத்தப்படும். மேலும், அவர் கோரிய திருக்குளப் பணிக்கு தற்போது மதிப்பீடு தயாரிக்கப்பட்டு வருகிறது. இரண்டு மாத காலத்திற்குள்ளாக அந்தப் பணி மேற்கொள்ளப்படும்.

உறுப்பினர் அவர்கள் பேசுகின்றபோது, இந்து சமய அறநிலையத்துறைக்கு நன்றி சொல்வார் என்று எதிர்பார்த்தோம். கன்னியாகுமரி தேவஸ்தானத்தில் ஒட்டுமொத்தமாக 490 திருக்கோயில்கள் உள்ளன.

கடந்த ஆட்சி காலத்தில் 2021-ஆம் ஆண்டு வரை அதற்கு ரூ.3 கோடி தான் அரசு மானியமாக வழங்கப்பட்டு வந்தது. இந்த ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு, முதல்வர் அவர்கள் அதனை ரூ.13 கோடியாக உயர்த்தி இதுவரை 33 கோடி ரூபாய் அரசு மானியமாக கன்னியாகுமரி தேவஸ்தானத்திற்கு வழங்கியுள்ளார்.

பல திருக்கோயில்களில் தீபங்கள் கூட எரியாத சூழ்நிலை இருந்ததை, இன்றைக்கு ஒளி வெள்ளத்தில் இறைவன் இருப்பதற்கு காரணமான திராவிட மாடல் அரசுக்கு அவர் நன்றி சொல்லவில்லையே என்று ஒரு வருத்தம் இருக்கிறது.

உறுப்பினர் அவர்கள் கோரிய அனைத்து கேள்விகளுக்கும் நிறைவு உண்டாகும்படி செய்யப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் பி.கே.சேகர்பாபு விளக்கமளித்தார்.

---

### நெய்வேலி – திருவாமூர் ஊராட்சி சமத்துவபுரத்தில்

# 600 மீட்டர் தூரத்திற்கு வெள்ளத் தடுப்புச் சுவர் அமைத்திடுவீர்!

## சட்டப் பேரவையில் சபா.இராஜேந்திரன் கோரிக்கை!

**சென்னை,ஏப்.3-**
**சட்டப் பேரவையில் நெய்வேலி தொகுதி உறுப்பினர் சபா.இராஜேந்திரன் கேள்வி நேரத்தின் போது திருவாமூர் ஊராட்சி சமத்துப்புரத்தில் 600 மீட்டர் தூரத்திற்கு வெள்ளத் தடுப்புச் சுவர் அமைக்கப்படுமா என்று கேள்வி எழுப்பினார்.**



இதுகுறித்து விவாதம் வருமாறு:

**சபா. இராஜேந்திரன்:** நெய்வேலி தொகுதி, திருவாமூர் ஊராட்சிக்குட்பட்ட சமத்துவபுரத்தில் 600 மீட்டர் தூரத்திற்கு வெள்ளத் தடுப்புச் சுவர் கட்ட அரசு முன்வருமா?

**அமைச்சர் துரைமுருகன்:** காமாட்சிபேட்டை கிராமம், கெடிலம் ஆற்றின் குறுக்கே தடுப்பணை அமைத்து, கரைகளைப் பலப்படுத்தி, வெள்ளத்தடுப்புச் சுவர் அமைக்கும் பணி ரூ.37 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும் என்று இந்த ஆண்டு மானியக் கோரிக்கையின்போது அறிவிக்கப்பட்டுள்ளது. உறுப்பினர் அவர்கள் கேட்கும் தடுப்புச் சுவர் பணியும் இதில் அடக்கம். விரைவில், நிர்வாக ஒப்புதல் அளித்து பணிகள் துவங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**சபா. இராஜேந்திரன்:** காமாட்சிபேட்டை தடுப்பணையோடு சேர்த்து திருவாமூரிலும் தடுப்புச் சுவர் கட்டப்படும் என்று அறிவித்திருக்கிற அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கி றேன். ஃபெஞ்சல் புயலின்போது இந்தப் பகுதியில் முழுவதுமாக வெள்ளநீர் புகுந்துவிட்டது. அந்த நேரத்தில் ஃபெஞ்சல் புயலின் பாதிப்பின்போது, கடலூர் மாவட்டத்திற்கு 2 தினம் இடைவெளியில் 2 முறை பார்வையிட்டு, ஆய்வு செய்த துணை முதலமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆய்வு செய்த துணை முதலமைச்சர் அவர்கள் பணிகளை முடுக்கி விட்டு, நிதிகளை ஒதுக்கி தந்தார்கள். அந்த அடிப்படையில், நிதி ஒதுக்கித் தந்திருக்கிற நீர்வளத் துறை அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். திருவாமூரின் அடுத்து பகுதியில் மலட்டாற்றின் வழியாக வெள்ளநீர் புகாமல் இருப்பதற்கு ஒரு 500 மீட்டர் தடுப்புச் சுவர் கட்டித் தர அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று கேட்டு, அமர்கிறேன்.

**அமைச்சர் துரைமுருகன்:** கடந்தாண்டு ஃபெஞ்சல் புயலின்போது ஏற்பட்ட வெள்ளம் கெடிலம் ஆற்றின் இடக்கரை வழியாக சமத்துவபுரத்தைச் சூழ்ந்தது. எனவே, அதைத் தடுக்க 600 மீட்டர் தூரத்திற்கு வெள்ளத்தடுப்புச் சுவர் அமைக்க சுமார் 90 இலட்சம் ரூபாய் ஆகும் என்று முன்னர் மதிப்பிடப்பட்டது. இந்த நிலையில், இந்த ஆண்டு மானியக் கோரிக்கையின்போது, கெடிலம் ஆற்றின் குறுக்கே ரூ.37 கோடி மதிப்பீட்டில் காமாட்சிபேட்டை இடத்தில் தடுப்பணை ஒன்று அமைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த தடுப்பணை அமையும் காமாட்சிபேட்டை என்ற இடத்திலிருந்து திருவாமூர் ஊராட்சியில் உள்ள கெடிலம் ஆற்றின் கரைகள் 600 மீட்டர் தூரத்தில் அமைந்துள்ளது. இந்தக் கரையை பலப்படுத்தும் பணி இந்த மதிப்பீட்டில் சேர்க்கப்பட்டுள்ளது. விரைவில், நிர்வாகம் அதற்கான நடவடிக்கையை மேற்கொள்ளும்.

**சபா. இராஜேஜேந்திரன்ந்திரன்:** அதேபோல், நெய்வேலி தொகுதிக்குட்பட்ட விசூர் வெள்ளவாரி ஓடையில் மழைக் காலங்களில் வெள்ளநீர் விளை நிலங்களில் புகாமல் இருக்கவும், கீழிருப்பு ஓடையில் உள்ள தடுப்பணையைச் சீரமைக்கவும் அமைச்சர் அவர்கள் நிதி ஒதுக்கி, பணிகளை மேற்கொள்ள வேண்டும் என்று தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

**அமைச்சர் துரைமுருகன்:** உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை அரசு முன்னுரிமைக் கொடுத்து பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.

---




# தி.மு.க. இளைஞர் அணி

## இந்தித் திணிப்பு – நிதிப் பகிர்வில் பாரபட்சம் – தொகுதி மறுசீரமைப்பில் அநீதி

## ஒன்றிய அரசைக் கண்டித்து தொகுதிதோறும் பொதுக்கூட்டம்!

## கழக இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு

கழக இளைஞர் அணியின் மாவட்ட – மாநகர – மாநில அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில், புதிய கல்விக்கொள்கை மூலம் இந்தியைத் திணிக்கும், நிதிநிலை அறிக்கையில், தமிழ்நாடு என்ற பெயரை முற்றிலுமாகப் புறக்கணித்து, நிதிப் பகிர்விலும் பாரபட்சம் காட்டும், தொகுதி மறுசீரமைப்பில் தமிழ்நாட்டை வஞ்சித்து, அநீதி இழைக்கும், ஒன்றிய அரசைக் கண்டிக்கும் வகையில், சட்டமன்றத் தொகுதிதோறும் கண்டனப் பொதுக்கூட்டம் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் முதன்மைப் பேச்சாளர் ஒருவர், இளம் பேச்சாளர் ஒருவர் என தொகுதிக்கு இரண்டு பேர் பேசவுள்ளனர். மாநில உரிமைகளுக்கு எதிராகச் செயல்படும் ஒன்றிய அரசைக் கண்டித்தும், 72–வது பிறந்தநாள் காணும் மாண்புமிகு கழகத் தலைவர் அவர்களின் திராவிட மாடல் ஆட்சியின் சாதனைகள் குறித்தும், எளிய மக்களுக்குப் புரியும் வகையில், விளக்கிப் பேசுவார்கள்.

மக்களுக்கு விழிப்பு உணர்வூட்டும் வகையில், அன்பகத்தில் தயாரிக்கப்பட்டுள்ள துண்டறிக்கையை, தொகுதி மக்களுக்கு வீடு வீடாகச் சென்று விநியோகித்து, அவர்களை இக்கூட்டத்தில் பங்கேற்கச் செய்யுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தமிழ் மக்களின் உரிமைக்குக் குரல் எழுப்பிடும் வகையிலும், உரிமையைத் தர மறுக்கும் ஒன்றிய அரசைக் கண்டிக்கும் வகையிலும், இந்தப் பொதுக்கூட்டங்களை எழுச்சியுடன் நடத்துமாறு, இளைஞர் அணி நிர்வாகிகள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

| வ. எண் | நாள் | கழக மாவட்டம் | சட்டமன்றத் தொகுதி | இடம் | பேச்சாளர்கள் |
|---|---|---|---|---|---|
| 1 | 04.04.2025 | சென்னை கிழக்கு | அம்பத்தூர் | யாதவாள் தெரு, பாடி, அம்பத்தூர் | இந்திரகுமார் தேரடி, அ.தஸ்னீம் பானு |
| 2 | 04.04.2025 | சென்னை கிழக்கு | திரு.வி.க நகர் | சந்திரயோகி சமாதி சாலை, மங்களபுரம் | மாண்புமிகு கோவி.செழியன், செ.ஜோதி காமாட்சிராஜன் |
| 3 | 04.04.2025 | தஞ்சாவூர் வடக்கு | திருவிடைமருதூர் | கதிராமங்கலம் கடைவீதி, திருவிடைமருதூர் | பேராசிரியர் சுப.வீரபாண்டியன், ரா.கருணாநிதி |
| 4 | 04.04.2025 | அணைக்கட்டு | வேலூர் | பேருந்து நிலையம், ஒடுகத்தூர் | திண்டுக்கல் ஐ.லியோனி, எம்.முகமது ஜபீர் |
| 5 | 05.04.2025 | தஞ்சாவூர் வடக்கு | கும்பகோணம் | சோழபுரம் கடைவீதி, கும்பகோணம் | நாஞ்சில் சம்பத், மு.காவியா |
| 6 | 05.04.2025 | கிருஷ்ணகிரி மேற்கு | வேப்பனஹள்ளி | சூளகிரி | சூர்யா கிருஷ்ணமூர்த்தி, சி.பவித்ரா |
| 7 | 05.04.2025 | திருவாரூர் | நன்னிலம் | கலைஞர் அரங்கம், மஞ்சக்குடி | கம்பம் செல்வேந்திரன், வீ.வேல்முருகன் |
| 8 | 05.04.2025 | திருச்சி வடக்கு | மண்ணச்சநல்லூர் | எதுமலை பிரிவு ரோடு | ராஜகம்பீரன் அப்பாஸ், ப.வெங்கடேஷ் |
| 9 | 05.04.2025 | திண்டுக்கல் கிழக்கு | திண்டுக்கல் | என்.ஜி.ஓ.காலனி, உழவர் சந்தை அருகில் | மதுரை எஸ்.பாலா, அ.சுஹாசினி |
| 10 | 06.04.2025 | கிருஷ்ணகிரி கிழக்கு | பர்கூர் | போச்சம்பள்ளி | நாஞ்சில் சம்பத், கு.முரளிகிருஷ்ணன் |
| 11 | 06.04.2025 | திண்டுக்கல் கிழக்கு | நிலக்கோட்டை | மதுரை ரோடு, வத்தலகுண்டு | ராஜகம்பீரன் அப்பாஸ், துரை தினகரன் |
| 12 | 06.04.2025 | திருச்சி வடக்கு | துறையூர் | வடக்குத் தெரு, நால் ரோடு, ந.குணசீலன் தெரு | முனைவர் இரா.தி.சபாபதி மோகன், அ.சார்மதி |

அன்பகம், சென்னை – 18.
நாள் : 02–04–2025.

கலைஞர் 100 1924 - 2023

**உதயநிதி ஸ்டாலின்**
செயலாளர், தி.மு.க. இளைஞர் அணி